**ஜனவரி – 06**

# TNPSC துளிகள்

- சென்னையில் நடைபெற்ற 13-வது நடனத் திருவிழாவில் புகழ்பெற்ற பரதநாட்டியக் கலைஞரான சாந்தா தனஞ்செயன் என்பவருக்கு நிருத்ய கலாநிதி பட்டம் வழங்கப்பட்டது.
- நாக்பூரிலுள்ள விஸ்வேஸ்வரய்யா தேசிய தொழில்நுட்பக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் குழுவானது பயன்பாடற்ற உலர் மின்கலங்களிலிருந்து உயர் மதிப்புடைய கிராபீன் என்பதைத் தயாரிக்க உதவும் ஒரு புதிய தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளனர்.
- தகவல் தொடர்பு (தனிப் பொறுப்பு) மற்றும் இரயில்வே துறை ஆகியவற்றின் இணை அமைச்சர் மனோஜ் சின்ஹா ராஜ்குமார் சுக்லாவின் நினைவு அஞ்சல் தலையை புதுடெல்லியில் வெளியிட்டார்.
    - ராஜ்குமார் சுக்லா 1917-ல் காந்தியடிகளால் துவங்கப்பட்ட சம்பாரன் சத்தியாக் கிரகத்தில் சிறப்பான பங்களிப்பினை அளித்தவராவார்.
- HDFC பரஸ்பர நிதி ஆனது ICICI ப்ருடென்ஷியல் பரஸ்பர நிதியை முந்தி இரண்டு வருடங்களுக்குப் பிறகு மிகப்பெரிய சொத்து மேலாண்மை நிறுவனமாக முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத தாக்குதல்கள் அதிகரிப்பின் காரணமாக ஆப்கானிய குடிமக்களுக்கு வருகையின் பொழுது விசா வழங்கும் வசதியை பாகிஸ்தான் ரத்து செய்ய முடிவு செய்துள்ளது.
- கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகமானது தீனதயாள் உபாத்தியாயா கிராமின் கவுசல்யா திட்டத்தின் கீழ் கிராமப்புற இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சியளிப்பதற்காக மாருதி சுசுகி இந்தியா நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது.
- பத்து ஆண்டுகளுக்கு முன்னர் வாயேஜர் 1 & 2 ஆல் மதிப்பிடப்பட்ட அளவை விட அதிக விகிதத்தில் சனிக் கோளானது அதன் அடையாளச் சின்னமான வளையத்தை இழந்து வருவதை நாசாவின் புதிய ஆராய்ச்சியானது உறுதிபடுத்தியுள்ளது.
    - சனிக் கோளின் வளையமானது அதன் காந்தப் புலத்தினால் பனித் துகள்களின் தூசியான மழைத் துளி போல் சனிக் கோளின் ஈர்ப்பு விசையால் உள்ளே இழுக்கப்படுகிறது.
- ஆந்திரப் பிரதேச அரசானது போலாவரம் திட்ட தளத்தில் முதலாவதும் ஒட்டுமொத்தத்தில் 41-வதுமான வட்ட வடிவ கதவைப் பொருத்தும் பணியைத் தொடங்கியுள்ளது.
    - இந்த திட்டமானது 2019 மே மாதத்தில் முடிக்கப்படுமென்றும் 2019 டிசம்பரில் புவியீர்ப்பு முறையில் கால்வாய்களுக்கு நீர் திறக்கப்படுமென்றும் அரசு நம்புகிறது.
- ஸ்ரீநகரில் உள்ள பிரபலமான தால் ஏரி முழுவதுமாக உறைந்துள்ளது. இந்நகரமானது சமீபத்தில் கடந்த 11 ஆண்டுகளில் குறைந்த பட்ச வெப்பநிலையாக 7.6 டிகிரி செல்சியஸ் அளவிற்கு குறைந்துள்ளது.
- அஸ்ஸாம் உடன்படிக்கையின் பிரிவு VI ஐ அமல்படுத்துவதற்காக M.P

பெஸ்பராவுவாவின் தலைமையின் கீழ் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்டக் குழுவினை இந்திய அரசு அறிவித்துள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## பஞ்ச் தீர்த் தளம் தேசிய பராம்பரியமாக அறிவிப்பு

- வடமேற்கு பாகிஸ்தானில் உள்ள கைபர் பக்துன்க்குவா மாகாண அரசானது பெஷாவரில் உள்ள பண்டைய இந்து சமய தளமான பஞ்ச் தளத்தை தேசிய பாரம்பரிய தளமாக அறிவித்துள்ளது.



- பக்துன்க்குவா மாகாண (KP - Khyber Pakhtunkhwa) தொல்லியல் இயக்குநரகம் மற்றும் அருங்காட்சியகம் ஆகியவை KP 2016 தொல்பொருளியியல் சட்டத்தின் கீழ் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளன.
- இந்த கோயிலில் உள்ள 5 குளங்களின் மூலமாக பஞ்ச் தீர்த் எனும் இந்த பெயரை அத்தளம் பெற்றது.

## புதிய அமைதி ஒப்பந்தம்

- ஏமனின் அதிபர் அப்திரப்பு மன்சூர் ஹௌதியின் படைகளுக்கும் ஏமனின் ஹௌதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தம் டிசம்பர் 18 அன்று துறைமுக நகரமான ஹோதிடாவில் அமலுக்கு வந்தது.
- இந்த ஒப்பந்தமானது ஸ்டாக்ஹோமில் ஐ.நா. சபை நடுவராக ஈடுபட்டு நடைபெற்ற ஒரு பேச்சுவார்த்தையில் வைத்து கையெழுத்தானது.
- இந்த ஒப்பந்தத்தின்படி 21 நாட்களில் அனைத்து சண்டையிடுபவர்களும் ஹோதிடாவிலிருந்து திரும்ப வேண்டும்.
- அமைதி நிலையை மேற்பார்வையிடுவதற்காக அரசு மற்றும் கிளர்ச்சியாளர்களின் பிரதிநிகளின் கண்காணிப்புக் குழுவை ஐ.நா. கண்காணிப்பாளர்கள் அமைப்பர்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## பசுமை -Ag திட்டம்

- அரசானது உலகளாவிய சுற்றுச்சூழல் நன்மைகள் மற்றும் சிக்கலான பல்லுயிர்த்தன்மை மற்றும் வன நிலப்பரப்புகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றிற்காக இந்திய வேளாண்மையை மாற்றுதல் எனும் திட்டத்தினை உலகளாவிய சுற்றுச்சூழல் வசதியுடன் இணைந்து தொடங்கியுள்ளது.
- இந்த திட்டமானது உணவு மற்றும் வேளாண்மை அமைப்புடன் இணைந்து உயர் பாதுகாப்பு மதிப்புடைய கீழ்க்காணும் 5 மாநிலங்களின் நிலப்பரப்புகளில் செயல்படுத்தப்படும்.
    - மத்தியப்பிரதேசம் - சம்பல் நிலப்பரப்பு
    - மிசோரம் – தம்பா நிலப்பரப்பு
    - ஒடிசா – சிம்லிபால் நிலப்பரப்பு
    - ராஜஸ்தான்- பாலைவன தேசியப் பூங்கா நிலப்பரப்பு
    - உத்தரகாண்ட் - கார்பெட் ராஜாஜி நிலப்பரப்பு
- இந்த பசுமை AG திட்டமானது பல்லுயிர்த்தன்மை, காலநிலை மாற்றம் மற்றும் நீடித்த நில மேலாண்மை குறிக்கோள்கள் மற்றும் நடைமுறைகளை இந்திய வேளாண்மையுடன் ஒருங்கிணைக்க முற்படுகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## அப்பலோ 8-ன் 50-வது ஆண்டு விழா

- சந்திரனுக்கான நாசாவின் முதலாவது விண்கலமான அப்பல்லோ 8 ஆனது 2018 டிசம்பர் 21 அன்று தனது 50ஆம் ஆண்டினை நிறைவு செய்தது.
- 1968 டிசம்பர் 21 அன்று தொடங்கப்பட்ட இது அமெரிக்காவின் அப்பலோ விண்வெளித் திட்டத்தின் 2வது மனித விண்வெளிப் பயணத் திட்டமாகும்.




- மனிதரை சுமந்து கொண்டு குறைமட்ட புவிப்பாதையை விட்டுச் சென்று சந்திரனை அடைந்து பின் அதனையும் சுற்றிவிட்டுப் பாதுகாப்புடன் திரும்பிய முதல் விண்கலம் இதுவாகும்.
- பிராங்க் போர்மன், ஜேம்ஸ் லோவெல் மற்றும் ஆண்டர்ஸ் ஆகிய மூன்று வீரர்களும்

குறைமட்ட புவிப்பாதைக்கு அப்பால் பயணம் செய்து பூமியை முழுக் கோளாக கண்டுவிட்டு பின் மற்றொரு விண்வெளிப் பொருளின் ஈர்ப்பு விசைக்குள் சென்ற முதல் மனிதர்களாக ஆனார்கள்.

## கொரோலேவ் எரிமலைப் பள்ளம்

- செவ்வாய் கிரகத்தின் மீதான ஒரு பனி படர்ந்த பள்ளம் கொரோலெவ் பள்ளமாகும்.
- ஐரோப்பிய விண்வெளி கழகத்தின் மார்ஸ் எக்ஸ்பிரஸ் திட்டத்தினால் செவ்வாயில் உள்ள பனியால் சூழப்பட்ட கொரோலேவ் எரிமலைப் பள்ளத்தின் படம் பிடிக்கப்பட்டது.
- இந்த பள்ளத்தின் தரை தளமானது அதன் விளிம்பிலிருந்து 2 கி.மீ (1.2 மைல்) அளவு ஆழத்தில் அமைந்துள்ளது. இது பூமியின் மாபெரும் பள்ளத்தாக்கின் (Grand Canyon) ஆழத்தை விட அதிகமாகும்.



- மார்ஸ் எக்ஸ்பிரஸ் திட்டம் ஆனது 2013 ஜுன் மாதம் தொடங்கப்பட்டு அதே ஆண்டின் டிசம்பர் மாதத்தில் செவ்வாயின் சுற்றுப்பாதையில் நுழைந்தது.
- அன்றிலிருந்து செவ்வாயின் மேற்பரப்பை உயர் தெளிவுள்ள புகைப்படக்கருவி மற்றும் ரேடார், எஸ்பெக்ட்ரோ மீட்டர் உள்ளிட்ட மற்ற கருவிகளைப் பயன்படுத்தி இந்த ஆய்வு கணக்கெடுப்பு மேற்கொண்டு வருகிறது.

# மாநிலச் செய்திகள்

## காவல் துறையின் மீதான ரக்சா செயலி

- ஆந்திரப் பிரதேச முதல்வர் சமீபத்தில் குப்பம் நகரில் சித்தூர் போலீசாரால் வடிவமைக்கப்பட்ட பிராண ரக்சா இணையதள செயலியை வெளியிட்டிருக்கின்றார்.
- இந்த செயலியானது சிக்கல்களில் உள்ள பெண்களைத் தொடர்பு கொள்ளவும் சாலை

விபத்துகளில் சிக்கிக் கொண்ட நபர்களின் உயிரைக் காப்பாற்றவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### லலித்கிரியில் புத்த அருங்காட்சியகம்

- ❖ பழமையான முத்திரைகள் மற்றும் கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்ட ஒடிசாவில் உள்ள ஒரு பழமையான புத்தமதக் குடியேற்றப் பகுதியான லலித்கிரி ஒரு அருங்காட்சியகமாக மாற்றப்பட்டுள்ளது.
- ❖ கட்டாக் மாவட்டத்தில் அமைந்திருக்கும் இத்தளமானது, ரத்தினகிரி மற்றும் கோனாரக் ஆகியவற்றை அடுத்து இந்திய தொல்லியல் ஆய்வுத் துறையின் கீழுள்ள புவனேஸ்வர் வட்டாரத்தில் உள்ள மூன்றாவது அருங்காட்சியக தளமாகும்.



- ❖ இந்த லலித்கிரியில் அகழ்ந்து எடுக்கப்பட்ட கண்டுபிடிப்புகள் மௌரியர்களுக்குப் பிந்தைய காலத்திலிருந்து 13-வது நூற்றாண்டு வரை கலாச்சார இணைப்பை உறுதிப்படுத்தும் நான்கு மடாலயங்களின் எஞ்சியிருக்கும் பகுதிகளை உறுதிபடுத்துகின்றது.

## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### ராம்நாத் கோயங்கா பத்திரிக்கைத் துறையில் நிபுணத்துவத்திற்கான விருதுகள்

- ❖ பத்திரிக்கைத் துறையில் ராம்நாத் கோயங்கா நிபுணத்துவ விருதுகளின் 13-வது பதிப்பு புதுதில்லியில் நடத்தப்பட்டது.
- ❖ 2017ம் ஆண்டிற்கான அச்சு, ஒளிபரப்பு மற்றும் டிஜிட்டல் துறைகளில் சிறந்த நிபுணத்துவத்திற்கான விருதுகளை 18 பிரிவுகளில் 29 வெற்றியாளர்களுக்கு மத்திய உள்துறை அமைச்சர் வழங்கினார்.
- ❖ 2005 ஆம் ஆண்டில் ராம்நாத் கோயங்கா பத்திரிக்கைத் துறையில் நிபுணத்துவம் என்ற விருதுகளை இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமம் ஏற்படுத்தியது.
- ❖ இந்த விருது இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தின் நிறுவனர் ராம்நாத் கோயங்காவின்

நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக ஏற்படுத்தப்பட்டது.

| **தமிழ்நாடு பத்திரிக்கையாளர்கள்** | **ஊடகம்** | **விருதின் பிரிவுகள்** | **காரணம்** |
|---|---|---|---|
| M. குணசேகரன் | நியூஸ் 18 | பிராந்திய மொழிகள் | ஒக்கி சூறாவளியின் போது மீனவர்கள் மீதான அவரது அறிக்கைக்காக. |
| விஜய் குமார் S | தி இந்து | விசாரணை அறிக்கைப் பிரிவு | தமிழ்நாடு குட்கா ஊழலில் எவ்வாறு வரி செலுத்துபவர் அதிகாரிகளை எவ்வாறு பணம் கொடுத்து சரிகட்டினர் என்பது தொடர்பான அவரது அறிக்கைகளுக்காக. |
| சந்தியா ரவிசங்கர் | The wire.in | சுற்றுப்புறச் சூழல் மீதான அறிக்கைப் பிரிவு | தமிழ்நாட்டில் சட்ட விரோதமான கடற்கரை மணற் சுரங்கம் மீதான அவரது விசாரணை அறிக்கைகளுக்காக |




- - - - - - - - - - - - - - -